2004 நவம்பர் 17]

6—

ஆரம்ப சுகாதார நிலையம்

***48696—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வீராணம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

முற்பகல் 10-35

திரு. கா.தி. இளையகண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்திவிட்டால் இதில் உள்ள சுமார் 8 ஊராட்சிகள் பயனடையும். உதாரணமாக எம். பாலப்பட்டி, கோராத்துப்பட்டி, பளையகாரனூர், சின்னனூர், தைலானூர், தாசநாயக்கன்பட்டி, டி. பிரம்மாபாளையம் மற்றும் வீராணம் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் பகுதிகள் பயனடைகின்றன. இந்த 8 ஊராட்சிகளிலும் சுமார் 40 ஆயிரம் மக்கள் தொகை உள்ளது. எனவே மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில் இந்தத் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2004 நவம்பர் 17

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வரவேண்டுமென்றால் அங்கு குறைந்தது 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கவேண்டும். இந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கக்கூடிய மக்கள் தொகை 2,756. அதுமட்டுமல்லாமல், குறைந்தது 4 கி.மீ. சுற்றளவிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தால் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசின் வரையறைபடி நமது மாநிலத்திலே கிட்டத்தட்ட 1,173 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இருக்க வேண்டும். இருந்தபோதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக கிட்டத்தட்ட 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து அந்த இடத்திற்கு ஏற்றாற்போல் சாத்தியக்கூறு இருக்குமானால் அதற்கும் அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா.தி. இளையகண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைத்துக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்பட்ட சித்த மருத்துவர்களுக்கு ஓராண்டு காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகள் இதுவரையிலும் எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. இருந்தபோதிலும் நீங்கள் கூறியது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.